பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

11 08 2025 MONDAY 7 15 PM

ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- ரஷ்யாவுடனான போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டியது அவசியம் என்று யுக்ரைன் அதிபர் திரு. Volodymr Zelensky-யிடம் பிரதமர் திரு.நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.
- வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக தேர்தல் ஆணையம் தனது கடமையை நிறைவேற்ற எதிர்க் கட்சிகள் விரும்பவில்லை என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் குற்றம் சாட்டியுள்ளார்.
- பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின் கீழ், தமிழகத்தில் 41 லட்சம் இலவசஎரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.
- மஹாராஷ்ட்ர மாநிலம், புனே-யில் நேரிட்ட சாலை விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.
- உலக விளையாட்டுப் போட்டிகளின் WUSHU பிரிவில் இந்தியாவின் Namrata Batra இறுதியாட்டத்திற்கு முன்னேறி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

>>>>>><<<<<<

ரஷ்யாவுடனான போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டியது அவசியம் என்று யுக்ரைன் அதிபர் திரு. Volodymr Zelensky-யிடம் பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், திரு.Volodymr Zelensky-யுடன் தொலைபேசியில் உரையாடியது மகிழ்ச்சி அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அப்போது, ரஷ்யா – யுக்ரைன் இடையே போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக நடைபெற்று வரும் பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்து கேட்டறிந்ததாக அவர் கூறியுள்ளார்.

அங்கு விரைவில் அமைதி ஏற்பட வேண்டியது அவசியம் என்று அப்போது தாம் வலியுறுத்தியதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துரைத்ததாகவும், அமைதி ஏற்படுவதில் சாத்தியமான அனைத்து பங்களிப்பையும் இந்தியா வழங்கும்என்றும், இருநாடுகளுக்கும் இடையேயான உறவுகள் மேலும் வலுப்பட உறுதிபூண்டிருப்பதாகவும் திரு. நரேந்திர மோடி அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>>><<<<<

பிஹாரில் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதாரமற்ற குற்றச்சாட்டை கூறி வருவதாக மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தல் ஆணையம் தனது கடமையை நிறைவேற்ற எதிர்க் கட்சிகள் விரும்பவில்லை என்று குறை கூறினார்.

எந்த ஒரு விவாதத்திற்கும் எதிர்க் கட்சியினர் தயாராக இல்லை என்றும் ஆக்கப்பூர்வமான முடிவு ஏற்படுவதில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும் திரு பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

இதற்கிடையே நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு மத்திய இளையோர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை இணை அமைச்சர் திருமதி. Rakahs Khadse கண்டனம் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் எமது செய்தியாளரிடம் பேசிய அவர், தேசிய விளையாட்டு நிர்வாக மசோதா மற்றும் ஊக்கமருந்துக்கு எதிரான தேசிய மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அவை எதிர்கால தலைமுறையினருக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று தெரிவித்துள்ளார்.

ஆனால், இந்த மசோதா குறித்து விவாதம் நடத்த எதிர்க்கட்சிகளுக்கு விருப்பம் இல்லை என்று திருமதி. Raksha Khadse குற்றம் சாட்டினார்.

>>>>>>>><<<<<

வரி செலுத்துவோரின் வசதிக்காக நாடுமுழுவதும் வருமான வரித்துறை அலுவலகங்களில் உதவி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், அந்தந்த பகுதிகளுக்கு உட்பட்டு, ஜிஎஸ்டி சேவை மையங்களும் முழுஅளவில் செயல்பாட்டில் உள்ளதாக கூறினார்.

இந்த மையங்கள் வரி செலுத்துவோர் மற்றும் பொதுமக்களின் குறைகளை தீர்ப்பதற்கு தேவையான தகவல்களை வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வரி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தாமாக முன்வந்து வரி செலுத்துவோரை ஊக்குவிக்கும் நோக்கத்திலும், இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் சிறப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக திரு. பங்கஜ் சௌத்ரி தெரிவித்தார்.

இதற்கிடையே, திருத்தியமைக்கப்பட்ட வருமான வரி சட்ட மசோதா இன்று மக்களவையில் நிறைவேறியது.

>>>>>>>><<<<<

ஜவுளி உற்பத்தியை அதிகரிக்கவும், உலக அளவில் சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாக உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகையை மத்திய அரசு நடைமுறைப்படுத்தியுள்ளதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு. பபித்ரா மார்க்கரிட்டா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், இதற்காக 10 ஆயிரத்து 683 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பாக கூறினார்.

300 கோடி ரூபாய் முதலீட்டிலும், ஆண்டுக்கு 600 கோடி ரூபாய் அளவுக்கு பரிவர்த்தனை செய்யும் நிறுவனங்களுக்கு

உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே, மற்றொரு கேள்விக்கு பதிலளித்த திரு. பபித்ரா மார்க்கரிட்டா, நாடுமுழுவதும் மகளிர் நெசவாளர்கள் உள்பட கைத்தறி நெசவாளர்களின் நலன்களுக்காக தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக கூறினார்.

>>>>>>><<<<<

பிரதமரின் இலவச எரிவாயு திட்டத்தின் கீழ், தமிழகத்தில் கடந்த மாதம் வரை சுமார் 41 லட்சம் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டிருப்பதாக மத்திய பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், நாடுமுழுவதும் இந்த திட்டத்தின் கீழ், 10 கோடியே 33 லட்சம் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டிருப்பதாக கூறினார்.

கடந்த மாதம் ஒன்றாம் தேதி வரை, எரிவாயு இணைப்பு கோரி 41 ஆயிரம் விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளதாகவும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை விண்ணப்பித்த அனைவருக்கும் எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டு விட்டதாகவும் திரு. சுரேஷ் கோபி தெரிவித்தார்.

>>>>>>><<<<<

கர்நாடக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சராக இருந்த திரு. K.N. Rajanna தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

அவரை அமைச்சரவையில் தொடர்ந்து நீடிக்கச் செய்வதற்கு முதலமைச்சர் திரு. சித்தராமையா மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.

இதையடுத்து, திரு. ராஜன்னாவின் ராஜினாமாவை அம்மாநில ஆளுநர் திரு. தாவர்சந்த் கெலாட் ஏற்றுக் கொண்டார்.

முன்னதாக, எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, மக்களவைத் தேர்தலில் முறைகேடு நடைபெற்றதாக தெரிவித்திருந்தார். அவருடைய கருத்தை மறுக்கும் வகையில்

திரு. ராஜன்னா பேசியிருந்தது காங்கிரஸ் கட்சிக்குள் சர்ச்சையை ஏற்படுத்தியது.

>>>>>>><<<<<

கோவா மாநில சட்டப்பேரவையில் பழங்குடியினருக்கான பிரதிநிதித்துவத்தை மறுசீரமைப்பதற்கான மசோதா மாநிலங்களவையில் இன்று நிறைவேற்றப்பட்டது.

இந்த மசோதா, மக்களவையில் கடந்த மாதம் ஏற்கனவே நிறைவேறியது.

பட்டியல் பிரிவைச் சேர்ந்த பழங்குடியின உறுப்பினர்கள் அதிக அளவில் கோவா சட்டப்பேரவையில் இடம்பெறுவதற்கு இந்த மசோதா வகை செய்கிறது.

>>>>>>><<<<<

மகாராஷ்டிரா மாநிலம் புனேயில் ஜீப் பள்ளத்தில் கவிழ்ந்து நேரிட்ட விபத்தில் 7 பெண்கள் உயிரிழந்தனர். 31 பேர் காயம் அடைந்தனர்.

அங்குள்ள கண்டேஸ்வர் கோவிலுக்கு சென்று கொண்டிருந்த போது சாலையோரத்தில் உள்ள 100 அடி பள்ளத்தில் வாகனம் கவிழ்ந்ததில் இந்த விபத்து ஏற்பட்டதாக காவல் துறையினர் தெரிவித்தனர்.

காயம் அடைந்தவர்கள் சந்தோலி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாகவும் அவர்கள் கூறினார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு சமூகவலைதளத்தில் இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாக கூறியுள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா 2 லட்சம் ரூபாய் வழங்கவும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கவும் பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

>>>>>>><<<<<

Fiji நாட்டிற்கு மனிதாபிமான உதவியாக இந்தியா 5 மெட்ரிக் டன் தட்டைப் பயறை வழங்கி வருவதக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்தோ – பசிபிக் நாடுகளில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, முதல்கட்டமாக இந்த தானியம் அனுப்பப்பட்டிருப்பதாக இந்திய தூதரகத்தின் சமூகவலைதளப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம். அந்நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதுடன், வேளாண் நடவடிக்கைகளுக்கும் வலு சேர்ப்பதாக அமையும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<

உலக விளையாட்டுப் போட்டிகளின் WUSHU பிரிவில் இந்தியாவின் Namrata Batra இறுதியாட்டத்திற்கு முன்னேறி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 52 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், பிலிப்பைன்ஸின் Krizan Faith Collado-வை வென்றார்.

>>>>>>><<<<<

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியின் 22 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியா ஒரு தங்கம், 4 வெள்ளி, 8 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

பாங்காக்கில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 80 கிலோ எடைப்பிரிவில் Ritika தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் 57 கிலோ எடைப்பிரிவில் Yatriயும் 60 கிலோ எடைபிரிவில் பிரியாவும், ஆடவர் 75 கிலோ எடைப்பிரிவில் நீரஜ்-ம், 90 கிலோ எடைப்பிரிவில் Ishan-ம் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

மகளிர் 48 கிலோ எடைப்பிரிவில் Bhawna, 65 கிலோ எடைப்பிரிவில் Parthavi, 70 எடைபிரிவில் Pranjal, 75 கிலோ எடைப்பிரிவில் Sruti ஆகியோர் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் 60 கிலோ எடைப்பிரிவில் Harsh, 80 கிலோ எடைபிரிவில் Ankush, 85 கிலோ எடைபிரிவில் Rockey, 90 கிலோ எடைப்பிரிவில் Mayur ஆகியோரும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

>>>>>>>><<<<<

இங்கிலாந்தில் நடைபெற்ற சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Rutuja Bhosale – இங்கிலாந்தின் Naiktha Bains இணை பட்டம் வென்றது.

>>>>>>END><<<<<